# இறப்பிற்கு பின்னுள்ள காரியங்களின் சாஸ்திரம்

(Science underlying post-death rites - Tamil)

## முன்னுரை

பிறப்பிலிருந்து இறப்பு வரையில் உள்ள பல நிலைகளில், மனிதனை ஈச்வரனிடத்தில் மனதை செலுத்தும் முகமாக ஹிந்து தர்மத்தில் பல தார்மீக சடங்குகள் விதிக்கப்பட்டுள்ளன. இதில், இறுதி சடங்குகள் என்பது, இறப்பிற்குப் பின் செய்ய வேண்டிய கர்மாவாகும்.

பலர், இந்த இறுதி சடங்குகளை, தர்ம-சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது என்பதாலோ அல்லது வீட்டிலுள்ள பெரியவர்களின் வழிமுறைப்படியோ, தங்கள் கடமையாகக் கொண்டு செய்கிறார்கள்; பெரும்பாலோர், இதிலுள்ள மஹத்துவத்தையும், ஆன்மீக சாஸ்திரத்தின் உள்ளார்ந்த பொருளையும் உணர்வதில்லை. எந்த ஒரு கர்மாவின் ஆதார பூர்வமான சாஸ்திரத்தைத் தெரிந்து கொண்டு, அதன் மஹத்துவத்தை உணர்ந்து செய்வதால், நம்பிக்கை வலுப்பட்டு, அதிக ச்ரத்தையோடு அக்கர்மாவைச் செய்ய முடிகிறது. ச்ரத்தையோடு செய்யப்படும் காரியம் பூரண பலனைக் கொடுக்கின்றது. இவ்விதமாக, ச்ரத்தையின் முக்கியத்துவம் எடுத்துக் கூறப்படுகிறது. இறுதி சடங்குகளை இயந்திரத்தனமாக

செய்யாமல் ச்ரத்தையோடு செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில், இந்த சிறிய கையேட்டில், பல விஷயங்கள், ஆன்மீக கண்ணோட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இறுதி சடங்குகளை, ச்ரத்தையோடும், விதிமுறைப்–படியும் செய்வதால், இறந்தவரின் லிங்கதேஹம் (சூட்சும உடல்) பூலோகத்திலோ, ம்ருத்யு லோகத்திலோ மாட்டிக் கொள்ளாமல், ஸத்கதி பெற்று, மேலுலகங்களுக்கு செல்ல முடிகிறது. முன்னோர்களின் அதிருப்தியால் குடும்பத்தில் ஏற்படுகின்ற கஷ்டங்கள் மற்றும், இறந்தவரின் லிங்கதேஹத்தின் மீது தீய சக்திகளின் ஆக்கிரமிப்பு ஆகியவை குறைகின்றன.

இந்த சுலபமான நூலைப் படித்துப் புரிந்து கொண்டு, ஹிந்துக்கள் இறுதி சடங்குகளின் மஹத்துவத்தை உணர்ந்து, அவர்களுக்கு தர்மத்தின் மேலுள்ள ச்ரத்தையும் திடப்பட வேண்டும் என்பதே ஸ்ரீகுரு சரணங்களில் செய்யப்படும் பிரார்த்தனை. – **தொகுத்தவர்**

**ஒரு உதாரண தலைமுறையை உருவாக்க**

**Balsanskar.com**

# அட்டவணை


1. இறக்கும் தறுவாயில் நாமஜபம் சொல்வதன் மஹத்துவம் 11
2. இறக்கும் தறுவாயிலிருப்பவர்க்கு செய்யப்படும் காரியங்கள் 13
3. இறப்பிற்கு முன் தயார் செய்ய வேண்டியவை 16
4. ஒருவரின் மரணத்திற்கு பின் 13 நாட்கள் செய்ய வேண்டிய முக்கிய கர்மாக்கள் 16
5. இறந்த தினத்தன்று செய்யப்படும் கர்மாக்களின் சாஸ்திரம் 37
6. இறந்தவர் உபயோகித்த பொருட்களை என்ன செய்ய வேண்டும்? 53
7. மரண தீட்டு காலம் 55
8. அஸ்தி சேகரிப்பு மற்றும் அஸ்தி விஸர்ஜனம் 57
9. பிண்ட தானம் 57
10. இறப்பிற்கு பின் 10-வது, 12-வது மற்றும் 13-வது நாட்களில் செய்யப்படும் கர்மாக்களின் முக்கியத்துவம் 61